செ.வெ.எண் : 11 நாள் : 04.04.2021

**வாக்கு நமது உரிமை, வாக்களிப்பது அனைவரின் ஜனநாயக கடமை, 100% வாக்குப்பதிவு கோயம்புத்தூர் மாவட்டத்தின் இலக்கு.**

****************

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி, தமிழகத்தில் சட்டமன்ற பொதுத்தேர்தல வருகின்ற (06.04.2021) அன்று நடைபெற உள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளில் **15,19,027** ஆண் வாக்காளர்கள், **15,62,573** பெண் வாக்காளர்கள் **428** மூன்றாம் பாலினத்தவர்கள் என **30,82,028** வாக்காளர்கள் உள்ளனர்.

| **கோயம்புத்தூர் மாவட்டம்** | | | | | |
|---|---|---|---|---|---|
| **வ. எண்** | **சட்டமன்ற தொகுதி** | **ஆண் வாக்காளர்கள்** | **பெண் வாக்காளர்கள்** | **இதர வாக்காளர்கள்** | **மொத்தம் வாக்காளர்கள்** |
| 1. | 111-மேட்டுப்பாளையம் | 1,43,702 | 1,53,128 | 40 | **2,96,870** |
| 2. | 116-சூலூர் | 1,55,035 | 1,62,063 | 26 | **3,17,124** |
| 3. | 117-கவுண்டம்பாளையம் | 2,32,142 | 2,32,990 | 96 | **4,65,228** |
| 4. | 118-கோவை வடக்கு | 1,70,463 | 1,68,147 | 38 | **3,38,648** |
| 5. | 119-தொண்டாமுத்தூர் | 1,61,915 | 1,64,783 | 81 | **3,26,779** |
| 6. | 120-கோவை தெற்கு | 1,26,158 | 1,26,571 | 24 | **2,52,753** |
| 7. | 121-சிங்காநல்லூர் | 1,61,579 | 1,63,625 | 26 | **3,25,230** |
| 8. | 122-கிணத்துக்கடவு | 1,60,514 | 1,66,312 | 42 | **3,26,868** |
| 9. | 123-பொள்ளாச்சி | 1,08,852 | 1,18,159 | 38 | **2,27,049** |
| 10. | 124-வால்பாறை | 98,667 | 1,06,795 | 17 | **2,05,479** |
| | **மொத்தம்** | **15,19,027** | **15,62,573** | **428** | **30,82,028** |

வாக்காளர்கள் கூட்ட நெரிசலை தவிர்க்க ஏதுவாக மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் 1050 வாக்காளர்களுக்கு மிகாமல் மாவட்ட முழுவதிலும் 4427 வாக்குப்பதிவு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கு தலா ஒரு வாக்குப்பதிவு மையம், பெண்கள் வாக்குப்பதிவு மையமாக அமைக்கப்படவுள்ளது.

| சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2021 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ.எண் | சட்டமன்ற தொகுதி | வாக்குச் சாவடிகள் | மின்னணு வாக்குப்பதிவு இயந்திரகள் | | வாக்குப்பதிவு சரிபார்ப்பு இயந்திரங்கள் (VVPAT) |
| | | | Ballot Unit | Control Unit | |
| 1. | 111-மேட்டுப்பாளையம் | 413 | 496 | 496 | 550 |
| 2. | 116-சூலூர் | 463 | 556 | 556 | 616 |
| 3. | 117-கவுண்டம்பாளையம் | 676 | 812 | 812 | 900 |
| 4. | 118-கோவை வடக்கு | 499 | 1198 | 599 | 664 |
| 5. | 119-தொண்டாமுத்தூர் | 471 | 566 | 566 | 627 |
| 6. | 120-கோவை தெற்கு | 359 | 862 | 431 | 478 |
| 7. | 121-சிங்காநல்லூர் | 449 | 1078 | 539 | 598 |
| 8. | 122-கிணத்துக்கடவு | 485 | 582 | 582 | 646 |
| 9. | 123-பொள்ளாச்சி | 318 | 382 | 382 | 423 |
| 10. | 124-வால்பாறை | 294 | 353 | 353 | 392 |
| மொத்தம் | | 4427 | 6885 | 5316 | 5894 |

இத்தேர்தலில் வாக்காளர்கள் வாக்களிக்க 11 விதமான அரசு வழங்கும் அடையாள அட்டைகளில் ஏதேனும் ஒன்றை பயன்படுத்தி வாக்களிக்க இந்திய தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.

சட்டமன்ற பொதுத்தேர்தலில் வாக்காளர்கள் தங்களின் அடையாளத்தினை மெய்பிப்பதற்கான அடையாள அட்டை சான்று காண்பிப்பதன் அடிப்படையிலேயே வாக்களிக்க அனுமதிக்கப்படுகின்றார்கள். இந்தியத் தேர்தல் ஆணையம் வாக்காளர்கள் அனைவருக்கும் வாக்காளர் அடையாள அட்டை வழங்கியுள்ள போதிலும், வாக்குப்பதின்போது வாக்காளர் அடையாள அட்டை அளிக்க இயலாத வாக்காளர்கள்

I. ஆதார் அட்டை,
II. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அட்டை,
III. புகைப்படத்துடன் கூடிய வங்கி / அஞ்சலக கணக்குப் புத்தகங்கள்
IV. தொழிலாளர் நல அமைச்சக திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு ஸ்மார்ட் அட்டை,
V. ஓட்டுநர் உரிமம்,
VI. நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN CARD)
VII. தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட ஸ்மார்ட் அட்டை,

VIII. இந்திய கடவுச்சீட்டு,

IX. புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம்,

X. மத்திய / மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்களால் / வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களால் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டை

XI. பாராளுமன்ற / சட்டமன்ற / சட்ட மேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அலுவலக அடையாள அட்டை

ஆகிய 11 ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை காண்பித்து வாக்களிக்கலாம் என இந்தியத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் 20A பிரிவின் கீழ் பதிவு பெற்றுள்ள வெளிநாடு வாழ் இந்தியர்கள் அவர்களின் கடவுச்சீட்டினை (PASSPORT Original) காண்பித்தால் மட்டுமே வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளபடி வாக்குப்பதிவு தினத்தன்று காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும்.

வாக்காளர்கள் / பூத் முகவர்கள் தங்களின் அலைப்பேசிகளை வாக்குச்சாவடியினுள் கட்டாயமாக கொண்டு வரக்கூடாது.

கொரோனா வைரஸ் தொற்று பாதுகாப்பு நடவடிக்கையாக வாக்களிக்க வருகை தரும் வாக்காளர்கள் மாஸ்க் அணிதல், சானிடைசர்

திரவம் கொண்டு கைகளை சுத்தம் செய்தல், சமூக இடைவெளியினை பின்பற்றுதல் போன்றவற்றினை நிச்சயம் பின்பற்றிட வேண்டும்.

தெர்மல் ஸ்கேன் மூலம் பரிசோதனை செய்த பின்னரும், கைகழுவும் திரவத்தினால் கைகளை சுத்தம் செய்த பின்னரே வாக்காளர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்கள். வாக்காளர்களுக்கு வாக்களிக்கும் ஒருகரத்திற்கு மட்டும் கையுறை (Glovse) வழங்கப்படும்.

மேலும், மாலை 6 மணி முதல் மாலை 7மணி வரை கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட உள்ளனர்.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு தனிமைபடுத்தப்பட்டவர்களுக்கு வாக்குச்சாவடி வரும் வாக்களிக்க ஏதுவாக முழுகவச உடை(**Personal Protective Equipment KIT**), முகக்கவசம், கைகழுவும் திரவம் உள்ளிட்ட பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட உள்ளது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**